# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 65

**2 மதிப்பெண் வினாக்கள்**

20 x 2 = 40

1) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் - இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்.

**பதில் :**

| S.No | காலனியாதிக்கம் | ஏகாதிபத்தியம் |
|---|---|---|
| 1. | காலனி என்னும் சொல் 'கலோனஸ்' என்னும் லத்தீன் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் 'விவசாயி' என்பதாகும். | இம்பீரியம் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. ஆதிக்கம் செய்தல் என்று பொருள். |
| 2. | காலனியாதிக்கம் என்பது மக்களை ஒரு புதிய இடத்தில் குடியேற்றுவது. குடியேறியவர்கள் நிரந்தரமாக தங்கி வாழ்வர். அங்கேயே | ஒரு நாடு குடியேறுதல் மூலமாகவோ, இறையாண்மை செலுத்துதல் மூலமாகவோ, மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிகளிலோ வேறொரு நாட்டின் மீது அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கும். |

2) ஜூலு பூர்வகுடிகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) ஜூலு பூர்வக்குடிகள் தங்களின் போர்த் திறனுக்காகப் பெயர் பெற்றவர்கள்.
(ii) புகழ் பெற்ற போராளிகளான சாக்கா ஜூலு போன்றவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்கள். (iii) ஜூலு பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலப் படைகள் அப்பகுதிகளைப் பதிமூன்று தலைமையுரிமைப் பகுதிகளாகப் பிரித்தனர். ஜூலுக்கள் தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெறவேயில்லை. அவர்கள் தென்னாப்பிரிக்காவில் இனப்பாகுபாட்டிற்கு எதிராக ஒரு நூற்றாண்டு காலம் போராட நேர்ந்தது.

3) இந்தியப் பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக.

**பதில் :** இந்தியாவைக் காலனி நாடாக்கிய செயல்பாட்டை மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.
**(i)முதற்கட்டம் :** வாணிக முதலாளித்துவம்.
**(ii) இரண்டாம் கட்டம் :** தொழில்துறை முதலாளித்துவம்.
**(iii) மூன்றாம் கட்டம் :** நிதி மூலதன முதலாளித்துவம்.

4) கர்னல் பென்னிகுயிக்.

**பதில் : கர்னல் பென்னி குயிக்:**
(i) பென்னிகுயிக் ஓர் இராணுவப் பொறியாளரும், குடிமைப் பணியாளரும், சென்னை மாகாணச சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆவார்.
(ii) மேற்கு நோக்கி ஓடும் பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்கு நோக்கித் திருப்பினால் வைகை ஆற்றைச் சார்ந்திருக்கும் இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி கொண்டவையாக மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார்.
(iii) ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு நிதியைப் பெற முடியாத நிலையில் பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்ப சொத்துக்களை விற்று, அப்பணத்தைக் கொண்டு அணையைக் கட்டி முடித்தார்.
(iv) அணை கட்டும் பணிகள் 1895-ல் முடிவுற்றன. பெரியார் அணையிலிருந்து கிடைக்கும் நீர் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது.

5) தாயகக் கட்டணங்கள் (Home Charges) பற்றி விளக்கவும்.

**பதில் :** தாயகக் கட்டணம் (Home Charges) என்ற பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரர்களுக்குச் சேர வேண்டிய லாபத்தில் பங்கு, வாங்கிய கடனின் மீதான வட்டி, ஊதியத்திலிருந்து பெறப்பட்ட சேமிப்பு, அதிகாரிகளுக்கான ஓய்வூதியம், லண்டனில் உள்ள இந்திய அலுவலகத்திற்கான செலவுகள் இந்தியாவிற்கு வரும் அல்லது இந்தியாவிலிருந்து செல்லும் ஆங்கிலப் படைகளுக்கான போக்குவரத்துச் செலவு எனும் பெயரில் கம்பெனி பெருமளவுப்

பணத்தை ஆண்டுதோறும் இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தது. இதற்கு தாயகக் கட்டணங்கள் என்று பெயர்.

6) தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவை?

**பதில் :** மலேசியா, பர்மா, சயாம். இந்தோ-சீனா, பிலிப்பைன்ஸ் ஆகியன.

7) பெர்லின் மாநாடு பற்றி குறிப்பு வரைக,

**பதில் :** 1. 1884 - 1885 இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அழைக்கப்படுகிறது.
2. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத் தீரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது.
3. காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துக்கல்லின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
4. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவான தெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கும் உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

8) 16 ஆம் நூற்றாண்டு முதலாக இந்தியாவிலிருந்த ஐரோப்பிய சக்திகள் யாவை?

**பதில் :** 1. டச்சு கீழக்கிந்தியக் கம்பெனி (நெதர்லாந்து)
2. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி (இங்கிலாந்து)
3. டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி (டென்மார்க்)
4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி
5. பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி (பிரான்ஸ்)
6. ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி

9) வணிக முதலாளித்துவம் என்றால் என்ன?

**பதில் :** ஒரு நாடு செல்வத்தையும் அதிகாரத்தையும் அடையும் முயற்சியில் அது பின்பற்றும் நடைமுறையிலுள்ள பல பொருளாதாரக் கோட்பாடுகளை வணிக முதலாளித்துவம் என்கிறோம்.

10) 'ஒப்பந்தக் கூறி முறை' - குறிப்பு வரைக.

**பதில் :** 1. ஒப்பந்தக் கூலி முறை என்பது தண்டனைக்குரிய ஓர் ஒப்பந்தமாகும்.
2. இவ்வொப்பந்தத்தின் படி ஒப்பந்தக் கூலியான ஒருவர் வேலை செய்ய மறுத்தாலோ, வேலைக்கு வராமல் போனாலோ, அவருடைய முதலாளியின் ஆணைகளுக்குப் பணிய மறுத்தாலோ பணியிடத்தில் காணப்படாவிட்டாலோ அவர் ஊதியம் மறுக்கப்படுதல் அல்லது சிறைத்தண்டனைக்கு உள்ளாவார் என்பதாகும்.

11) காலனியாதிக்கம் குறித்து சில அரசியல் தத்துவவாதிகள் கூறியது என்ன?

**பதில் :** (i) காலனியாதிக்கத்தையும், ஏகாதிபத்தியத்தையும், அவற்றின் செயல்பாடுகளையும், அடிமை நாட்டு மக்களை நாகரிகம் மிக்கவர்களாக மாற்றும் முயற்சி என சில அரசியல் தத்துவவாதிகள் கூறினர்.
(ii) நாகரிகமற்ற சமூகங்கள் முன்னேறி தாராளவாத அரசியல் நிறுவனங்களைத் தாங்களே தொடர்ந்து நிர்வகித்துக் கொள்ளும் திறன்களைப் பெறுகிற வரை தற்காலிகமாக வேறொரு நாட்டைச் சார்ந்திருப்பது அல்லது பாதுகாப்பிலிருப்பது அச்சமூகங்களுக்கு அவசியம்.
(iii) ருட்யார்ட் கிப்ளிங் எழுதிய பாடலொன்றில் இடம் பெற்றுள்ள, 'வெள்ளையரின் சுமை' எனும் சொற்றொடர் இதை விளம்புகிறது.

12) போர் ஏற்படாமலேயே, ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன?

**பதில் :** (i) ஆப்பிரிக்காவின் உட்பகுதிகள் ஆய்ந்தறியப்படாமலே இருந்தன.
(ii) 1875க்குப் பின்னர், ஐரோப்பியரின் ஊடுருவலும், குடியேற்றங்களை நிறுவுதலும் பெருமளவில் நடைபெறத் தொடங்கியது.
(iii) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் குடியேற்ற நாட்டு மாநாட்டில் ஆப்பிரிக்காவைப் பல ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிப்பதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.
(iv) இவ்வாறு முக்கியமான ஐரோப்பிய நாடுகளிடையே போர் ஏற்படாமல் ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிகளை ஏற்படுத்துவது சுமூகமாக நடைபெற்றது.

13) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு பற்றி ஒரு குறிப்பு வரைக.

**பதில் :** (i) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது. (ii) மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத் தீரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது.
(iii) காங்கோ நதியின் வழநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
(iv) பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

14) இந்தியாவில் ஆங்கிலேயர் நாடாளுமன்ற சக்தியாக மாறியது எவ்வாறு?

**பதில் :** (i) போர்த்துசீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆசிய நான்கு முக்கிய ஐரோப்பிய சக்திகளிடையே ஏற்பட்ட போட்டியில் மூன்று கர்நாடகப் போர்களுக்குப் பின்னர் ஆங்கிலேயர் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சைப் போட்டியிலிருந்து வெளியேற்றினர்.
(ii) ஆங்கிலேயர் அனைத்து சுதேச அரசுகளையும் கைப்பற்றினர்.
(iii) குறிப்பாக வலிமையான சவால்களாகத் திகழ்ந்த மைசூர் சுல்தான்களை மூன்று ஆங்கிலேய- மைசூர் போர்களிலும் மராத்தியரை மூன்று ஆங்கிலேய-மராத்தியப் போர்களிலும் வெற்றி கண்டனர்.
(iv) 1816இல் கூர்காக்களையும், 1843இல் சிந்திகளையும், 1849இல் சீக்கியரையும் வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர். இவ்வெற்றிகள் இந்தியாவில் ஆங்கிலேயர் நாடாளுமன்ற சக்தியாக மாறுவதைச் சாத்தியப்படுத்தின.

15) கிழக்கிந்தியக் கம்பெனியில் ராபர்ட் கிளைவின் பங்களிப்பைப் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) 1750களிலும் 1760களின் தொடக்கத்திலும் ராபர்ட் கிளைவ் பழைய முகலாயப் பேரரசின் செல்வச் செழிப்பு மிக்க பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.
(ii) கிழக்கிந்தியக் கம்பெனி, சுதேச அரசுகளைக் கட்டாயப்படுத்திச் சில சலுகைகளைப் பெற்றது. தனது பொருள்கள் இடம் விட்டு இடம் செல்கையில் செலுத்த வேண்டிய வரிகளிலிருந்து விலக்கு பெற்றது.
(iii) ஆனால் அதே வரியை இந்திய வணிகர்கள் செலுத்தி ஆக வேண்டும். (iv) பிளாசிப் போருக்குப் (1757) பின்னர் கம்பெனி 1.2 மில்லியன் பவுண்டுகளைப் பெற்றது.
(iv) ராபர்ட் கிளைவ் மட்டுமே 31500 பவுண்டுகளை பெற்றிருந்தார்.
(v) அதைத் தவிரவும் ஆண்டுக்கு 27,000 பவுண்டுகள் வருமானத்தைத் தரும் ஜாகீரையும் பெற்றார்.
(vi) பக்ஸார் போருக்குப் (1764) பின்னர் முர்ஷிதாபாத் கருவூலம் கொள்ளையடிக்கப்பட்டது. (vill) 1765இல் கம்பெனி நில வரிவசூல் செய்யும் உரிமைகளைப் பெற்று முகலாயப் பேரரசிற்கு இடைத்தரகரானது.

16) ரயத்துவாரி முறை என்றால் என்ன?

**பதில் :** (i) ரயத்துவாரி முறை என்பது தென்னிந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட வித்தியாசமான நிலவருவாய் வரி முறையாகும்.
(ii) இம்முறையின்படி விவசாயி நிலத்தின் உரிமையாளர் ஆவார். அவரே வரி செலுத்துவார்.
(iii) இடையீட்டாளர் அல்லது நிலவரி வசூலிப்பவர் இடையீடு இல்லாமல் அரசே விவசாயியுடன் நேரடித் தொடர்பில் இருக்கும்.
(iv) நிலவரியை ஒரு விவசாயி முறையாகச் செலுத்தும்வரை நிலம் அவருக்குச் சொந்தமானதாக இருக்கும்.
(v) நிலவரி செலுத்தத் தவறினால் அவர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்.
(vi) மேலும் அவருக்குச் சொந்தமான கால்நடைகளையும் ஏனைய உடைமைகளையும் அரசு பறிமுதல் செய்துகொள்ளலாம்

17) பர்மா சிறு குறிப்பு வரைக.

**பதில் :** 1. 1886 முதல் 1937 வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே பர்மா இருந்தது. ஒரு துணை நிலை ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டது.
2. நியமன உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் குழு அவருக்கு உதவியது. பர்மாதேக்கு பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
3. மேலும் தனது செழிப்பு மிகுந்த மண் வளத்தால் அரிசி ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாகவும் திகழ்ந்தது. தென்னிந்தியாவின் பல பகுதிகள் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசியைச் சார்ந்திருந்தன.

18) மூன்றாம் கட்ட முதலாளித்துவத்தைப் பற்றிக் கூறுக.

**பதில் :** 1. மூன்றாம் கட்டத்தில் மேலாண்மை முகவர் நிறுவனங்கள், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை செழித் தோங்கின.
2. இருப்புப்பாதை அமைத்தல், அஞ்சல்துறை, நீர்ப்பாசனம், நவீன வங்கித் துறை, கல்வித்துறை ஆகியவற்றில் மிகப் பெருமளவிலான முதலீட்டினைச் இங்கிலாந்து அரசு செய்தது. கொண்டு செல்லப்பட்ட நிதியின் கணிசமான பகுதி இருப்புப்பாதை அமைக்கும் தொழிலில் முதலீடு செய்யப்பட்டது.

19) பேரரசர் மெனிலிக்கின் அரசியல் செயல்பாடுகளைப் பற்றிக் கூறுக.

**பதில் :** 1. எத்தியோப்பிய அதன் பாரம்பரிய அரசியல் அமைப்புடன், பேரரசர் மெனிலிக் என்பவரால் ஆளப்பட்டது.
2. அவருடைய ஆட்சியின் போது 1896 இல் எத்தியோப்பியா, இத்தாலியை அடோவா போர்க்களத்தில் புறமுதுகிடச் செய்தது.
3. இதன் பின்னர் அந்நாட்டு மக்களின் சுதந்திரத்தை எந்த ஐரோப்பிய சக்தியாலும் குறைக்க இயலவில்லை. ரயில் போக்குவரத்து, மின்சார வசதி, போன்றவற்றை அறிமுகம் செய்ததன் மூலமாக மெனிலிக் தனது நாட்டை நவீனமாக்கினார்.

20) ஒடிசா பஞ்சம் பற்றிக் கூறுக.

**பதில் :** 1886, 1867 இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதி வாழ்மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 5 x 5 = 25

21) இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.

**பதில் : ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கம் :**
(i) கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் இங்கிலாந்தில் ஒரு பெரிய நிலப்பிரபு ஆவார்.
(ii) இந்தியாவிலும் நிலப்பிரபுக்களை உருவாக்க அவர் திட்டமிட்டார்.
(iii) இடைத்தரகர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்த காரன்வாலிஸ் அவர்களை நிலப்பிரபுக்களைப்போல் நடத்தினார்.
(iv) ஜமீன்தார்கள் என்ற பெயரில் நிலப்பிரபுக்கள் உருவாக்கப்பட்டனர்.
(v) நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறிய இவர்கள் தங்கள் சொத்துக்களை மற்றவர்களுக்கு விற்கவும், வாரிசாக நிலங்களைப் பெறவும் உரிமை பெற்றனர்.
(vi) விவசாயிகள் வெறும் குத்தகைதாரர்களாக மாற்றப்பட்டனர்.
(vii) கம்பெனி அரசு ஜமீன்தார்களுடன் நேரடித்தொடர்பு வைத்துக்கொண்டு குத்தகைதாரர்களுடன் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ள ஜமீன்தார்களுக்கு முழு சுதந்திரம் அளித்தது.
(viii) வங்காளம், பீகார், ஒடிசா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஜமீன்தார்களுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்வு நிரந்தர நிலவரித்திட்டம் என அழைக்கப்பட்டது.
(ix) ரயத்துவாரி முறை என்பது தென்னிந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட வித்தியாசமான நிலவருவாய் வரி முறையாகும்.
(x) இம்முறையின்படி விவசாயி நிலத்தின் உரிமையாளர் ஆவார், அவரே வரி செலுத்துவார்.
(xi) நிலவரியை ஒரு விவசாயி முறையாகச் செலுத்தும்வரை நிலம் அவருக்குச் சொந்தமானதாக இருக்கும். நிலவரி செலுத்தத் தவறினால் அவர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார். மேலும் அவருக்குச் சொந்தமான கால்நடைகளையும் ஏனைய உடைமைகளையும் அரசு பறிமுதல் செய்து கொள்ளலாம்.
xii) நிலத்தில் தனிச்சொத்துரிமை எனும் கோட்பாட்டை ரயத்துவாரிமுறை அறிமுகம் செய்தது, தனிநபருக்குச் சொந்தமான நிலங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டன. தனது நிலங்களை விற்கவும், அடகு வைக்கவும், குத்தகைக்கு விடவும், நிலத்தின் மீதான தனது உரிமையை வேறொருவருக்கு வழங்கவும் விவசாயி உரிமை பெற்றிருந்தார்.
xiii) ஆங்கில அரசு வேளாண்மையை வணிகமயமாக்கும் கொள்கையைப் பின்பற்றியது.
xiv) விவசாயி தன்னுடைய வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்ய பன்னாட்டுச் சந்தையின் விலை நிலவரங்களைச் சார்ந்திருக்க வேண்டி இருந்தது. வேளாண் பொருள்களுக்கான தேவை வீழ்ச்சியுற்றபோது விவசாயிகள் துயரங்களுக்கு உள்ளாயினர்.
ஆப்பிரிக்காவில் காலனி அசிங்

22) ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் ஏற்ப்பட்டதை விவரி.

**பதில் : ஆப்பிரிக்கா காலனியாதல் :**

(i) பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதிவரை சகாராவிற்குத் தெற்கேயிருந்த ஆப்பிரிக்கப் பகுதிகள் பெரும்பாலும் வெளியுலகத்தினரால் அறியப்படாமலே இருந்தன.

(ii) ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளும் ஆய்ந்தறியப்படாமலே இருந்தன.

(iii) 1875க்குப் பின்னர், ஐரோப்பியரின் ஊடுருவலும் குடியேற்றங்களை நிறுவுதலும் பெருமளவில் நடைபெறத் தொடங்கியது.

(iv) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் குடியேற்ற நாட்டு மாநாட்டில் ஆப்பிரிக்காவைப் பல ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிப்பதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

(v) இவ்வாறு முக்கியமான ஐரோப்பிய நாடுகளிடையே போர் ஏற்படாமல் ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிகளை ஏற்படுத்துவது சுமுகமாக நடைபெற்றது.

(vi) 1881க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பிய சக்திகள் ஆப்பிரிக்காவின் மீது படையெடுத்து, கைப்பற்றிக் காலனிகளை ஏற்படுத்திய ஏகாதிபத்திய சகாப்தமானது ஆப்பிரிக்காவைப் பங்கிடுதல் அல்லது ஆப்பிரிக்கப் போட்டி என அழைக்கப்படுகிறது.

(vii) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது.

(viii) மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத்துடன் தொடாபுடைய பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது.

கனத்து

(ix) காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

(x) பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

23) பர்மாவில் ஆங்கிலக் காலனி ஆதிக்கம் பற்றிக் கூறுக.

**பதில் :** 1. ஆங்கிலேயர் மூன்று போர்களைத் தொடுத்த பின்னர் பர்மாவைக் கைப்பற்றினர்.

2. 1886 முதல் 1937 வரை பர்மா இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது.

3. ஒரு துணைநிலை ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டது.

4. நியமன உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக்குழு அவருக்கு உதவியது.

5. பர்மா தேக்கு பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மேலும் தனது செழிப்பு மிகுந்த மண்வளத்தால் அரிசி ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாகவும் திகழ்ந்தது.

6. தென்னிந்தியாவின் பல பகுதிகள் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசியைச் சார்ந்திருந்தன.

7. இரண்டாம் உலகப்போரின் போது பர்மா ஜப்பானியர் வசமான போது தென்னிந்தியாவில் அரிசிக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சமே உருவானது.

24) காங்கோ எவ்வாறு பெல்ஜியம் அரசுக்கு கைமாறியது என்பதை விவரி.

**பதில் :** 1. பெல்ஜியம் அரசர் இரண்டாம் லியோபோல்டு காங்கோவைக் கைப்பற்ற ஆர்வம் கொண்டிருந்தார்.

2. எனவே பெர்லின் மாநாடு இரண்டாம் லியோபோல்டுவுக்கு, காங்கோ பகுதியில் தன்னாட்சியரசை ஏற்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கியது,

3. காங்கோ பகுதியில் மதிப்பு மிக்க பொருள்களான ரப்பர், தந்தம் ஆகியவற்றின் வணிகத்தில் இவ்வரசுக்கு முற்றுரிமையும் வழங்கப்பட்டது.

4. இப்பொருள்கள் கொடூரமான முறையில் சேகரிக்கப்பட்டன.

5. ஆப்பிரிக்கர்கள் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

6. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிர்ணயம் செய்யப்பட்டது.

7. நிர்ணயம் செய்யப்பட்ட அளவுக்குப் பொருள்களை வழங்கத் தவறினால் கசையடியும். கை, கால் துண்டிக்கப்படுதலும் தண்டனைகளாயின.

8. பொருளாதாரம் சுரண்டப்படுவதாக மக்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்ததால் பெல்ஜியம் அரசாங்கம் பிரச்சனையில் தலையிட்டது.

9. லியோபோல்டு பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டார்.

10. 1908 இல் காங்கோவின் இறையாண்மை லியோபோல்டிடமிருந்து பெல்ஜியம் அரசுக்குக் கைமாறியது.

25) பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்து விவரி.

**பதில் :** (i) காலனியரசின் சுதந்திர வணிகக் கொள்கையும் கடுமையான நிலவரி வசூல் முறையும் பஞ்சங்கள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன.

(ii) 1866-1867இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதிவாழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர்.

(iii) 1876-1878 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரும் பஞ்சம் (தமிழில் தாது வருடப் பஞ்சம் என அழைக்கப்பட்டது) தென்னிந்தியாவைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களையும் கைவினைஞர்களையும் இங்கிலாந்தின் ஏனைய குடியேற்றங்களுக்குக் குடிபெயர வைத்தது.

(iv) அங்கு அவர்கள் பெருந்தோட்டங்களில் ஒப்பந்தக் கூலிகளாய் வேலை செய்தனர்.

(v) இந்தியாவில் இப்பஞ்சம் ஒரு கோடியே மூன்று இலட்சம் மக்களின் உயிர்களைப் பலி கொண்டது.

(vi) சென்னை மாகாணத்தில் 1876-1878ஆம் ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னதாக வறட்சி நிலவியது.

(vii) எடுத்துக்காட்டாகச் சென்னை மாகாணத்தில் இப்பஞ்சத்தால் மிக மோசமான பாதிப்புக்குள்ளான கஞ்சம், விசாகப்பட்டினம் ஆகிய இரு மாவட்டங்களிலிருந்து இப்பஞ்சக்காலத்திலும் உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்வது தொடர்ந்து நடைபெற்றது.

(viii) பஞ்சத்தைத் தொடர்ந்து வழக்கம் போல் பிளேக் (இறந்துபோன எலிகளால் பரவும் கொள்ளை நோய்), நீர்க் கோப்புடன் கூடிய கடுமையான காய்ச்சல் போன்ற பல தொற்றுநோய்கள் பரவி ஏற்கெனவே பட்டினியால் பலவீனமடைந்த மக்களைத் தாக்கிக் கொன்றன.

(ix) பிரிட்டிஷ் அரசுக்கு முன், கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியில் 1770-ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் மிகப் பெருமளவில் ஒரு கோடி மக்களின் உயிரைக் குடித்தது.

(x) 1943-இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் 30 லட்சம் மக்களை பலி கொண்டது.